பூந்தளிர் அமர் சித்திரக்கதை

No 35

COMICS PDF TIMES

மகாபாரதம் 8

செய்திகள் வாசிப்பது பூந்தளிர் அமர் சித்திரக்கதை

★ தமிழக விளையாட்டு வீரர், முன்னாள் டேபிள் டென்னிஸ் சாம்பியனான வி. சந்திரசேகர் அமெரிக்கா சென்று சிகிச்சை செய்து கொள்ள தமிழக முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 25,000த்தை திரு. எம். ஜி. ஆர். அனுமதித்துள்ளார்.

★ நாட்டில் விமானத் துறை வளர்ச்சிக்கு அரிய சேவை செய்ததற்காக 1985ம் ஆண்டுக்கான சர்வதேச ஏரோநாடிக் பெடரேஷனின் தங்கப் பதக்கம் முன்னாள் ஏர் இந்தியா நிறுவனத் தலைவரான ஜே. ஆர். டி. டாட்டாவுக்கு வழங்கப் பட்டது. இந்திய விமானத் துறையின் முன்னோடி திரு டாடா. 1930ல் ஒரு எஞ்சின் கொண்ட விமானத்தில் தனியாக இந்தியாவிலிருந்து லண்டனுக்குப் பறந்து சென்றார்.

★ சமீபத்தில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பேய்மழை வெள்ளத்தில் 55 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவு தானியங்கள், நாசமாயின என்று விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இருபது கோடிக்கு நஷ்டம்.

★ புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இலுப்பூர் என்ற கிராமத்திலுள்ள பஸ் நிலையத்தில் வறுமை மற்றும் காச நோயினால் வாடும் ஒரு தந்தை, தனது ஐந்து வயது மகனை ரூ. 225க்கு ஏலத்தில் விற்றார். தந்தையின் பெயர் இப்ராஹிம். வயது 42. கன்னியம்மாள் என்ற விதவைப் பெண் அந்தப் பையனை ஏலத்தில் எடுத்து அழைத்துப்போனாள்.

★ வியட்நாம் அரசு தன் நாட்டின் மிக உயர்ந்த விருதான தங்க நட்சத்திர விருதை மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்திக்கு வழங்கியது. இதை அவர் சார்பில் பிரதமர் ராஜீவ் பெற்றுக் கொண்டார். வியட்நாம் ஒன்றுபடுவதற்கு இந்திரா காந்தி அளித்த மாபெரும் ஆதரவுக்கும் வெளிநாட்டு ஆதிக்கத்தை அவர் துணிச்சலாக எதிர்த்ததையும் பாராட்டி இந்தவிருது அவருக்கு வழங்கப்பட்டது.

★ இந்தியாவில் உள்ள 7 புராதனச் சின்னங்கள் உலகின் புராதன சின்னங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. ஐ. நா கல்வி விஞ்ஞான ஸ்தாபனம் இந்த உலகப் புராதன சின்னப் பட்டியலைத் தயாரித்துள்ளது. இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்தியப் புராதனச் சின்னங்கள்: தாஜ்மகால், ஆக்ரா கோட்டை, அஜந்தா, எல்லோரா குகைச் சிற்பங்கள், கோனார்க் சூரிய ஆலயம், மகாபலிபுரம் சிற்பங்கள்.

★ 'ஜெய் ஜவான் ஜெய் கிஸான்' என்ற கோஷத்தை நாட்டுக்களித்தவர் திரு. லால் பகதூர் சாஸ்திரி. அவரது நினைவாக இந்தூருக்கு 16 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோல் சித்திகி கிராமத்தில் சாஸ்திரி சேவா நிகேதனை நிறுவப் போகிறார்கள். முழு அளவு சாஸ்திரியின் சலவைக் கல் சிலையை ஜனாதிபதி ஜைல் சிங் இங்கு திறந்து வைத்தார்.

EDITED, PRINTED AND PUBLISHED BY DINESH V. PAI FOR POOMPATTA PUBLICATIONS
PRINTED AT PAICO PRINTING PRESS, PAICO OFFSET PRINTERS AND
POOMPATTA PUBLICATIONS—PRINTING DIVISION, COCHIN



COMICS PDF TIMES


பாண்டவர்கள் வாரணா-வதத்துக்கு வந்ததும் அவர்-களைக் குதூகலத்தோடு முறைப்படி வரவேற்று மகிழ்ந்தார்கள் அவ்வூர்-மக்கள்.
பாண்டவர்கள் இதற்குப் பிரதியாக பலவகைப்பட்ட மனிதர்களின் வீடுகளுக்குச் சென்று குசலம் விசாரித்தார்கள். பிறகு புரோசனன் அவர்களை ஒர் அரண்மனைக்கு அழைத்துப் போனான்.
அந்த அரண்மனையில் தங்கியிருந்-தனர் - புரோசனனும் குடிமக்களும் உபசரிக்க. பிறகு புரோசனன் அவர்-களுக்காகவே கட்டப்பட்ட அரண்மனை-க்கு வரும்படி அழைக்கிறான். அவன் வற்புறுத்தலின்படி பாண்டவர்கள் புதிய மாளிகைக்குக் குடியேறி-னார்கள்.


புதிய அரண்மனையில் நுழைந்ததுமே யுதிஷ்டிரர், நெய், கொழுப்பு, அரக்கு இவற்றின் மணத்தை நுகர்ந்தார்.

பிறகு பீமனிடம் கூறினார்.
இந்த அரண்மனை தீப்பற்றக் கூடிய பொருள்களால் கட்டப் பட்டுள்ளது. துரியோதனனின் கையாளான இக்கொடிய- வன் - புரோசனன் - நம்மை உயிரோடு கொளுத்திக் கொல்ல தருணம் பார்த் திருக்கிறான்
மதியுக் விதுரர் இதையறிந்து என்னை எச்சரித் துள்ளார்.
நம் நன்மையையே விரும்பும் சித்தப்பா, இப்படியொரு மாளி- கை துரியோதனனின் ஆணைப்படியே உரு வாக்கப்பட்டுள்ளது என்று என்னிடம் கூறினார்.
தீயினால் நேரும் நம் மரணம், நம் தாத்தா பீஷ்மரைச் சினங் கொள் ளச் செய்யும். கௌரவர் களைத் துன்பத்திற்குள் ளாக்கும். இதை அவன் ஏன் செய்யவேண்- டும்?
பெரியவர்கள் இதை தற்செயலாக நிகழ் ந்ததென்று நம்புவார் கள் என்பது எண்ண மாக இருக்கும்.

பீமன் கூறினான்.
இம்மாளிகை தீப்பற்றக் கூடியது என்பது உங்களுக்குத் தெரியுமானால் நாம் முன்பு தங்கிய அரண்மனைக்கே திரும்பி விடலாம்.
யுதிஷ்டிரன் பதிலளித்தான்.
ஏதும் அறியாதவர்கள் போல, ஆனால் எச்சரிக்கையோடு நாம் இங்கேயே தங்குவோம்.
அவன் சூழ்ச்சியை நாம் அறிந்து கொண்டதாக புரோசனனுக்குத் தெரியுமானால் நம்மை உடனே தீக்கிரையாக்கி விடுவான்.
இங்கிருந்து வெளியேறினால், உளவாளிகளைக் கொண்டு துரியோதனன் நம்மைக் கொல்ல முற்படுவான்.
எதற்கும் துணிந்தவன் அவன். அவனுக்கு உதவ ஆட்களும் கஜானாவும் உள்ளன. நமக்கு இவை எதுவுமில்லை.
அதனாலேயே நம்மைக் கொல்லத் திட்டமிட்டிருக்கிறான்.


ஆகவே நாம் நம் எண்ணத்தை மறைத்துக் கொண்டு, இங்கு ஊர் சுற்றியும் வேட்டையாடியும் கழிப்போம். தப்பிச் செல்லும் வழியை அது சுலபமாக்கும்.
எச்சரிக்கையோடு தப்பிச் செல்லத் திட்டமிட்டபடி இங்கு இருப்போம். புரோசனனுக்கும் மக்களுக்கும் இது தெரியக்கூடாது. நம் பகுதியிலருந்து ரகசியமாக ஒரு சுரங்கப் பாதை அமைப்போம்.
இவ்விதம் நாம் செயல்படுவோமானால் எந்தத் தீயும் நம்மைப் பாதிக்காது.
இந்நிலையில் ஒருநாள் விதுரனின் நண்பர் ஒருவர் பாண்டவர்களை ரகசியமாகச் சந்திக்க வந்தார்.
சுரங்கம் அமைப்பதில் வல்லவனான என்னை விதுரர் உங்களிடம் அனுப்பியுள்ளார்.


என்னிடம் நம்பிக்கையுள்ள விதுரர் கூறினார்- பாண்டவர்களையும் அவர்கள் தாயையும் துரியோதனன் நெருப்பிட்டுக் கொல்லத் திட்டமிட்டிருக்கிறான். நீ போய் அவர்களுக்கு உதவு என்று.
நிலவில்லாத ஓர் இரவு, இந்த மாளிகைக்குத் தீ வைக்க புரோசனன் திட்டமிட்டிருக்-கிறான்.
பாண்டு புத்திரனே! விதுரர் இது பற்றி உங்களிடம் சூசகமாகத் தெரிவித்த போது நீங்கள் அதைப் புரிந்து கொண்டதாக பதிலளித்தீர்களில்லையா? என்னை நீங்கள் நம்புவதற்காகவே இந்த ரகசியத் தகவலை நினைவு படுத்தினேன்.

COMICS PDF TIMES


சுரங்க நுழைவாயில் அம்மாளிகையின் நடுவே தரைமட்டத்தில் அமைக்கப்பட்டு...
மறைக்கப்பட்டிருந்தது.
இரவு வேளையில் பாண்டவர்கள் ஆயு-தங்களோடு சுரங்கத்துள் படுத்திருந்-
தார்கள். பகல் போதில் காடுகளுக்குப் போய் வேட்டையிலீடுபட்டார்கள்.


புரோசனனின் முன்-
னிலையில் தங்கள்
உணர்ச்சிகளையும்
செயல்களையும் மறை
த்தபடி வாழ்ந்தார்கள்.
விதுரனின் நண்பனை
சுரங்க நிபுணனைத் தவிர
வாரணவத மக்களுக்கோ
மற்ற யாருக்குமோ பாண்
டவர்களின் திட்டம் தெரி-
யாது.
இப்படிப் போலியான மகிழ்ச்சி காட்டி
புரோசனனின் நம்பிக்கையைப் பெற்
றனர் பாண்டவர்கள்.
புரோசனன் உற்சாகமாக இருந்த வேளையில்...
..யுதிஷ்டிரர் தன் தம்பிகளிடம் கூறினார்.
நாம் தப்புவதற்கான வேளை
நெருங்கி விட்டது. புரோசனன்
தீயில் கருகிச் சாகும்படி நாமே
இம்மாளிகைக்குத் தீ
வைத்து விட்டுப்
போவோம்.



COMICS PDF TIMES

இரவு, எல்லாரும் தூங்கிய பிறகு, பலமான காற்று வீச ஆரம்பித்தபோது....
.. புரோசனன் தூங்கும் பகுதிக்கு பீமன் தீ வைத்தான்...
..பிறகு அதன் நுழைவாசலுக்கு-
.. மாளிகையின் பல்வேறு பகுதிகளுக்கும்.


மாளிகை
முழுவதும்
தீப்பற்றிக்
கொண்டதைக்
கண்ட
பாண்டு
குமாரர்கள்...
... தங்கள் தாயாருடன் சுரங்கத்துள் புகுந்தார்கள்.
கொழுந்து விட்டெரியும்
தீயினை மக்கள்
விழித்துக் கொண்டார்கள்.

COMICS PDF TIMES

வாரணவதத்து மக்கள், எரியும் மாளிகையைச்
சூழ்ந்து கொண்டு இரவு முழுதும் கதறிக் கொண்டி-
ருந்த போது –
.. பாண்டவர்கள் தாயுடன் ரகசிய சுரங்கப்பாதையில் களைத்-
துப் போய் நடந்து கொண்டிருந்தார்கள்.
பீதியாலும், தூக்கமின்மையாலும் அவர்களால் வேக
மாகப் போக முடியவில்லை.

பலவானான பீமன் தன் சகோதரர்களையும் தன் தாயையும் தூக்கிக் கொண்டு நடக்கலானான்.
சுரங்கத்திலிருந்து வெளிப்பட்டு கானகத்து இருளில்...
.. மார்பினால் மரங்களையும் பாதத்தினால் பூமியையும் உணர்ந்து முன்னேறினான்.


கானகத்தின் கோடியிலுள்ள கங்கைக் கரையை
அடைந்தார்கள். தீர்க்கதரிசியான விதுரன் அங்கு தன்
பணியாளனை அனுப்பியிருந்தார்.
நதியைக் கடக்க அதன் ஆழத்தைச் சோதித்
துக் கொண்டிருந்த பாண்டவர்களிடம்
வந்த அவன்...
..கூறினான்.
யுதிஷ்டிரரே! விதுரர் உங்களிடம் கூறிய வார்த்தைகள் இவை.
பாதுகாப்பான மறைவிடத்தின் ரக-சிய மறிந்தவர்களை-காட்டுத் தீ அணுகாது- அவர்கள் உயிர் வாழலாம்.

அதை நினைவு படுத்திக் கொள்வீர் களானால் நான் விதுரனின் ஆள் என்பது புரியும்.
தைரியமும் துணிவும் மிக்க விதுரர் - கௌரவர்- களும் கர்ணனும் சகுனி- யும் தோல்வியடையப் போவதாக. ஜோஸ்யம் கூறியுள்ளார்.
யந்திரம் இணைக்கப்பட்டு புயல் போல வேக- மாகச் செல்லக்கூடிய படகைப் பாண்டவர் களிடம் காட்டிய அவன் கூறினான்-
இப்படகு வெகு சுகமாக வும் வேகமாகவும் தண்ணீரில் மிதந்து செல்லக் கூடியது.

மனவருத்தமுற்ற பாண்டவர்களையும் குந்தியையும் படகில் ஏற்றினான் அவன்.
நதியில் படகைச் செலுத்திக் கொண்டே கூறினான்-
உங்கள் மீது கொண்ட எல்லையற்ற அன்பினால் விதுரர் கூறினார்...
..துக்கத்தை உதறிவிட்டு மன நிறைவோடு நீங்கள் பயணம் செய்ய வேண்டும் என்று.
கங்கையின் மறு கரையை அடைந்ததும்...
..அவன் விடை பெற்று வந்த வழியே திரும்பினான்.


பாண்டவர்கள் அரக்கு மாளிகை-யிலிருந்து தப்பி வெளியேறியதும் சுரங்கப்பாதை அமைத்த விதுர-னின் ஆள், சுரங்கப்பாதை-யின் வாயிலை நாசமாக்கி அழித்தான்.
இரவு கழிந்ததும் மக்கள் கூட்டம் பாண்டவர்களின் உடலைத் தேடிப்பார்க்க ஆரம்பித்தது.
நிஷாதப் பெண் அவளுடைய ஐந்து மகன்களின் கருகிய உடலைக் கண்டார்கள்.

அந்த மாளிகை அரக்-கினால் எழுப்பப்பட்டி-ருந்ததையும், புரோச-னனும் தீயில் மாண்டதையும் கண்டார்கள்.
அவர்கள் கூறினார் கள்.
துரியோதனனால் ஏவப்பட்ட, இக்கொடியவன் உருவாக்கிய அரக்கு மாளிகையில் அவனும் வெந்து மடிந்தான்.
உத்தமர்களான பாண்ட-வர்களைத் தீயிட்டுக் கொன்ற இந்த நீசனை அந்தத் தீயே பலி வாங்கி விட்டது.
திருதராஷ்டிரனுக்கு - பாண்டவர்கள் தீக்கிரை யானார்கள். உங்கள் குறிக்கோள் நிறைவேறி-யது என்று அறிவிப்-போம்.
செய்தி திருதராஷ்-டிரனுக்கு தெரி-விக்கப் பட்டது.


பாண்டவர்கள் இறந்ததைக் கேட்ட திருதராஷ்டிரன் ஆழ்ந்த துக்கத்தோடு கூறினான்.
பாண்டுவின் மரண வேதனையே தீரவில்லை. இன்று இந்த வீரர்களும் அவர்கள் தாயும் மரணமுற்றார்கள்.
அவர்கள் உற்றாரும், தோழர்களும் நாமும் தாமதமின்றி வாரணாவதம் போவோம். குந்தி போஜனின் மகளுக்கும் அவள் வீரப் புதல்வர்களுக்கும் ஈமச் சடங்குகளைச் செய்வோம்.
என் செல்வத்திலே குந்திக்கும் பாண்டவர்களுக்கும் இறுதி மரி- யாதையாக என்ன செய்ய வேண்- டுமோ அவைகளைச் செய்வேன்.

இப்படிக் கூறிய திருதராஷ்டிரன், தன் உறவினர்களோடு பாண்டு குமாரர்களுக்கு எள்ளும் நீரும் விட்டு இறுதிக் கிரியைகளைச் செய்தான்.
பிறகு எல்லோரும் துக்கமோடு கதறினார்கள்.
யுதிஷ்டிரனே! குரு வம்சத்து இளவரசனே!
ஏ, பீமா! அர்ஜுனா!
ஐயோ நகுலா! சகாதேவா! குந்தி!
பாண்டவர்களுக்காக மக்களும் கண்ணீர் விட்டார்கள். விதுரன் அதிக வேதனை காட்டவில்லை. உண்மை அறிந்தவனல்லவா?

இதனிடையே நட்சத்திரம் வழிகாட்ட, பாண்டவர்கள் தென் திசை நோக்கி நடந்தனர்.
நீண்ட பயணத்துக்குப் பின் அடர்ந்த கானகத்தையடைந்தனர்.
பசியும் தாகமும் களைப்பும் பார்வையை இருட்ட யுதிஷ்டிரன் பீமனிடம் கூறினன்.
புரோசனன் தீயில் மாண்டானா இல்லையா என்பது நமக்குத் தெரியாது.
இதை விடக் கொடியது இருக்க முடியுமா?

பிறர் பார்வையிலிருந்து ஒளிந்து வாழும் இந்த பயத்துக்கு எப்படி ஒரு முடிவு கட்டுவது?
இந்தக் கொடிய கானகத்தில் எங்கு எப்படிப் போவது என்று தெரியவில்லை. நடக்கவும் வலுவில்லை.
பீமா! நீ ஒருவனே பலசாலி! எங்களைச் சுமந்து செல்.
பீமன் தன் சகோதரர்களையும் தாயையும் சுமந்தபடி...


..முன்னேறலானான். வாயுவைப் போல கானகத்துள் பாய்ந்து சென்றபோது பாண்டவர்கள் நிலைவிழந்து போனார்கள்.
காட்டாறுகளைத் தாண்டி...
..பாறைகளில் தாவிப் பாய்ந்து..

மாலைக்குள் தனக்க தோற் கானகத்துக்கு வந்தான். குடிக்க நீரோ, உண்ணப் பழமோ இல்லாத கொடிய விலங்குகள் வாழும் காடு அது.
இருள் கவிந்ததும் மிருகங்களின் ஊளையோடு சூறைக் காற்றும் உக்கிரமாக வீச ஆரம்பித்தது.
தூக்கம் கண்களை வருத்த மேலே போக முடியாத பாண்டவர்கள் அங்கேயே அமர்ந்தார்கள். தாகம் தாங்காத குந்தி தன் மகன்களிடம் கூறினாள்.
ஐந்து பாண்டவர்களின் தாய் நான். அவர்கள் நடுவே தானிருக்கிறேன். ஆனாலும் தாகத்தால் செத்துக் கொண்டிருக்கிறேன்
தாயின் வார்த்தைகள் பீமனின் மனதைச் சுட்டது. பிரயாணத்தைத் தொடர்ந்தான்.

ஆள் அரவமற்ற அடர்ந்த காட்டில் போய்க் கொண்டிருக்கும் போது ஒரு பெரிய ஆல மரத்தைக் கண்டான்.
தாயையும் சகோதரர்களையும் அதனடியில் விட்டுக்கூறினான்.
நீர்ப் பறவைகளின் ஒலி கேட்கிறது. அருகே நீர் நிலையிருக்க வேண்டும்.
இங்கு இளைப்பாறுங்கள். நான் நீர் கொண்டு வருகிறேன்.
நீர்ப்பறவைகளின் ஒலி வரும் திசை நோக்கி பீமன் நடக்கலானான்.

விரைவில் ஒரு ஏரியை அடைந்தான்.
அங்கு தன் தாகத்தைத் தணித்துக் கொண்டு குளித்தான்.
பிறகு மேல் துண்டை நீரில் நனைத்துக் கொண்டு..
..வேகமாகத் திரும்பி..
தாய்-சகோதரர்களிடம் வந்தான்.

வெறும் தரையில அவர்கள் படுத்துறங்குவதைக் கண்டு துக்கம் மேலிடக் கத்தினான்.
என் தாயார் இப்படி கட்டாந்தரையில் படுத்துத் தூங்கும் காட்சியைக் காண நான் என்ன பாவம் செய்தேனோ!
குந்தி போஜனின் மகள், விசித்திர வீர்யனின் மரு- மகள் பாண்டுவின் மனைவி - இப்படி வெறும் தரையில் உறங்குவதா?
இந்திரன், வாயு இவர்களின் மகனைப் பெற்ற குந்தி அரண்மனை யில் ஹம்சதூளிகா மஞ்சத்தில் படுத்திருந்த- வள் இப்படி மண்தரை- யில். உறங்குவதா!
பாண்டு புத்திரர்கள் இப்படிப் புழுதியில் படுத்துத் தூங்குவதைக் காண்பது எத்தகைய. கொடுமை?

பொறுமை என்ற களங்க முடைய உறவோர் இல்லாதவனே இவ்வுலகில் மகிழ்ச்சியானவர்- தனித்து நிற்கும் ஒரு பழமரம் புனிதமானது என்று போற்றப்படுவதைப் போல- காரணம் அது அபூர்வமானதினால்.
நிறைய உறவுப் பேர்களை உடையவனும், நேர்மையும் திறமும் உள்ளவனும் கூட இவ்வுலகில் சந்தோஷமாக இருக்கிறான்.
செல்வத்தோடு, வல்லவனாக இருப்பவனும், தோழர்களையும் சுற்றத்தாரையும் நிறைய உடையவனும் கானகத்தில் உயர்ந்து நிற்கும் மரங்களைப் போலிருக்கிறான்.
நாங்களோ கொடிய திருதராஷ்டிரனையும் அவன் பிள்ளைகளாலும் நாடு கடத்தப்பட்டு, மரணத்திலிருந்து தப்பி இருக்கிறோம்.
களங்கமற்ற எண்ணங் கொண்ட துர்யோதனா! கடவுள் உன் பக்கமிருப்பதாகத் திருப்திப்பட்டுக் கொண்டிருக்கிறாய்.
யுதிஷ்டிரன் உன் மீது கோபப்பட்டு உன்னைக் கொல்லுமாறு எனக்கு ஆணையிடாததினால்தான் நீ இன்னும் உயிரோடிருக்கிறாய்.

இல்லையேல், என் கோபத்தில்
உன்னை உன் சகோதரர்களை
கர்ணனை சகுனியை
எமனுக்கு விருந்தாக்கி
இருப்பேன்.
இப்படிக் கூறிய பீமன் ஆத்திரத்துடன் கைகளை
உயர்த்திச் சூளுரைத்தான்.
அருகாமையில்
ஏதோ ஒரு நகரம்
இருக்க வேண்டும்.
இவர்கள் தூங்குகிறார்கள்.
இவர்களை எழுப்ப வேண்டாம்.
நான் விழித்திருக்கிறேன்.
இவர்கள் தூங்கி எழுந்ததும்
இதைக் கொண்டு
தாகம் தணித்துக்
கொள்ளட்டும்.
பீமன் விழித்தபடி
உட்கார்ந்திருந்தான்.
வாரணவதத்தில் கௌரவர்
கள் சூழ்ச்சி செய்த கொடிய
மரணத்திலிருந்து விதுர-
னின் உதவியால் பாண்ட
வர்கள் இவ்வாறு தப்பி-
னார்கள்.
வைசம்பாயனர் கூறிய பாரத
இதிகாசமான மகாபாரதத்தின்
எட்டாம் நாள் கதை
முடிவுற்றது.